## ஆசிரியர் தேர்வு வாரியம்

## பத்திரிக்கை செய்தி

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் *2022* ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் தகுதித் தேர்வு அறிவிக்கை *07.03.2022* அன்று வெளியிடப்பட்டு, விண்ணப்பங்கள் இணைய தளம் வாயிலாக *14.03.2022* முதல் பெறப்பட்டு வருகிறது. விண்ணப்பங்கள் பெற கடைசி தேதி *13.04.2022* ஆகும்.

ஆசிரியர் தகுதித் தேர்வுக்கான அறிவிக்கையில் பக்கம் எண் *4,* வரிசை எண் *3*(b) யில் ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் *2*க்கான கல்வித் தகுதிகள் குறித்தான வரையரையில் பட்டப்படிப்பு முடித்து பி.எட் இறுதியாண்டு படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் *Bonafide Certificate*-னை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பிக்க *Online* விண்ணப்பத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், அறிவிக்கையின் பக்கம் எண் *2,* வரிசை எண் *3*(a)ல் தாள் *1* க்கான கல்வித் தகுதிகள் குறித்தான வரையரையில் மேல்நிலைக் கல்வி முடித்து இறுதியாண்டு ஆசிரியர் கல்வி பட்டயப்படிப்பு *(Diploma in Teacher Education)* படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் *Bonafide Certificate*-னை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பிக்க *Online* விண்ணப்பத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, பி.எட் இறுதியாண்டு மற்றும் ஆசிரியர் கல்வி பட்டயப்படிப்பு *(Diploma in Teacher Education)* இறுதியாண்டு படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் *Bonafide Certificate*-னை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் தகுதித் தேர்விற்கு விண்ணப்பிக்கலாம் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

நாள் : *09.04.2022,*
இடம் : சென்னை – *6.*

**தலைவர்**